# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 115/2020 |
| நாள் | 14.11.2025 |
| வா.சா.1 | சோமசுந்தரம் |
| வயது | 75 |
| ஊர் | அரவக்குறிச்சி |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை**

எங்கள் நிலத்தில் பதிக்கும் பைப் லைனை இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நானும், பிரதிவாதிகளும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் வீரப்பகவுண்டரும், 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் வள்ளியப்ப கவுண்டர் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நானும், எனது தகப்பனார் வீரப்ப கவுண்டரும், 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் வள்ளியப்ப கவுண்டரும், கடந்த 19.03.1976 ம் தேதியன்று ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஆவணம் இவ்வழக்கில் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில், என்னுடைய தகப்பனார் வீரப்ப கவுண்டரும், 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் வள்ளியப்ப கவுண்டர் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கடந்த 1976 ம் வருடத்திற்கு பின்னிட்டு இறந்துவிட்டார். வா.த.சா.ஆ.6 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு சுமார் 50 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானவை என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண். 123/3, அரவக்குறிச்சி தாலுக்காவில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் சர்வே எண். 127

என்றும், சர்வே எண். 123/3 இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.127 உள்ள சொத்தின் பிரதிவாதிகளுக்கும் பங்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பாகத்திற்கு பின்னிட்டு அந்த சொத்து எங்களுக்கு வந்துவிட்டது. சர்வே எண்.127–ல் உள்ள சொத்தில் பிரதிவாதிகளுக்கு பங்கு உரிமை இல்லை. சர்வே எண்.127 உள்ள சொத்திற்கு தென்வடலாக சாலை ஒன்று அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் சாலை அரவக்குறிச்சியிலிருந்து அமராவதி ஆறு வரை செல்கிறது. மேற்படி தென்வடல் சாலைக்கு கீழ்புறம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.127–ல் கிணறு எதுவும் இல்லை. சர்வே எண்.127–ல் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் உண்டான நிலங்களை தவிர்த்து, வேறு நபர்களுக்கும் மேற்படி சர்வே எண்ணில் நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.127–ல் உள்ள மற்ற நில உரிமையாளர்களை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன்.

(கற்றறிந்த 2 வது பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.